# தமிழ்நாடு அரசு

## சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை இயக்குநரின் அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் மூன்றாண்டு 'Diploma in Civil Engineering' படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து "நில அளவை செய்வதற்கான உரிமம்" பெறுவதற்குரிய 3 மாத பயிற்சிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்த முழு விவரங்களை தமிழ்நாடு அரசின் வலைத்தளத்தில் (www.tn.gov.in) காணலாம்.

ஒம்/-ஐ.லூர்துசாமி
முதல்வர் / இணை இயக்குநர்(பயிற்சி)
நிலஅளவைப் பயிற்சி நிலையம்,
ஒரத்தநாடு

# <u>தமிழ்நாடு அரசு</u>

## நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை

**“நில அளவை செய்வதற்கான உரிமம்” பெறுவதற்குரிய பயிற்சிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**(காண்க: அரசு ஆணை எண்.362, வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்.04.10.2019)**

- விண்ணப்பதாரர் இந்திய குடிமகனாகவும், இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கும்போது கடந்த 5 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும். பள்ளி இறுதித் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி) தமிழை ஒரு பாடமாக கற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- **பயிற்சியின் நோக்கம்:-**

  நிலஅளவை செய்வதற்கான உரிமம் பெற்றவர்களை உரிய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தகுதியுடையோருக்கு நிலஅளவைப் பயிற்சி அளித்து உரிமம் வழங்குதல்.

  இப்பயிற்சி பெறுவோருக்கு அரசுப் பணியில் முன்னுரிமை ஏதும் வழங்கப்படமாட்டாது என்பதை விண்ணப்பதாரர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும், நிலஅளவை உரிமம் பெறுவோருக்கு வேலைவாய்ப்போ அல்லது ஊதியமோ வழங்கப்படும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் வழங்கப்படமாட்டாது.
- **பயிற்சி விவரம்:-**

  பயிற்சிக் காலம் : 3 மாதங்கள்

  முதல் இரண்டு மாதங்களுக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு நிலஅளவைப் பயிற்சி நிலையத்தில் பாரம்பரிய நிலஅளவை கருவிகளான சங்கிலி, நேர்கோணகட்டை (ம) கோணமானி ஆகியவற்றைக் கொண்டும், நவீன நில அளவைக் கருவிகளான பூகோள நிலைக்கலன் மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி ஆகியவற்றைக் கொண்டும் பயிற்சி அளிக்கப்படும். மூன்றாவது மாதத்தில் மறுநில அளவை / நகர நிலஅளவை நடைபெறும் மாவட்டங்களுள் ஒன்றில் புலப்பணி மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்படும். வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவு செய்தபின்னர் “நிலஅளவை செய்வதற்கான உரிமம்” வழங்கப்படும்.

- **பயிற்சிக் கட்டணம்:-**

  ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்). இத்தொகை எக்காரணம் கொண்டும் திரும்ப வழங்கப்படமாட்டாது. உறைவிடம், உண்டி மற்றும் பயண கட்டணங்களை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்பயிற்சிக் கட்டணத்தினை, விண்ணப்பதாரரின் விண்ணப்பம் ஏற்கப்பட்டு பயிற்சிக்கு அழைக்கப்படும் போது செலுத்த வேண்டும்.

- **கல்வித் தகுதிகள்:-**

  தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் மூன்றாண்டு 'Diploma in Civil Engineering' படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- **வயது வரம்பு:-** 01.01.2021 அன்று 50 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

- **தெரிவு செய்யப்படும் முறை:-**

  விண்ணப்பித்துள்ளோரில் Diploma in Civil Engineering-ல் அனைத்துப் பாடங்களிலும் ஒட்டுமொத்தமாக அதிக விழுக்காடு மதிப்பெண் (overall higher percentage of marks) பெற்றுள்ளோர் தெரிவு செய்யப்படுவர். ஓர் அணிக்கு (batch) தெரிவு செய்யப்படக்கூடிய பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கல்வித் தகுதிக்குரிய மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள், கல்வி சான்றிதழ்களின் நகல்கள் போன்றவற்றுடன் பதிவு அஞ்சல் மூலம் **"முதல்வர் / இணை இயக்குநர் (பயிற்சி), நிலஅளவைப் பயிற்சி நிலையம், ஒரத்தநாடு - 614625, தஞ்சாவூர் மாவட்டம்"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். விண்ணப்பம் அடங்கிய அஞ்சல் உறையின் மேல் **"நில அளவை உரிமம் பெறுவதற்குரிய பயிற்சிக்கான விண்ணப்பம்"** என குறிப்பிடப்பட வேண்டும்.

## நில அளவை செய்வதற்கான உரிமம் பெறுவதற்குரிய பயிற்சிக்கான விண்ணப்பம்

**சுய சான்றொப்பமிட்ட புகைப்படம்**

### 1. தனிப்பட்டவிவரம்

(1) விண்ணப்பதாரர் பெயர் :

(2) தந்தையார் பெயர் :

(3) தாயார் பெயர் :

(4) பிறந்த தேதி :

(5) பாலினம் :

(6) எந்த நாட்டை சேர்ந்தவர் :

(7) கைப்பேசி எண் :

(8) மின்னஞ்சல் :

(9) நிரந்தர முகவரி :

(10) தொடர்பு முகவரி :

(நிரந்தர முகவரியில் இருந்து வேறுபட்டால்)

### 2. கல்வித் தகுதி விவரங்கள் :

| தேர்வின் பெயர் | தேர்வான மாதம் மற்றும் வருடம் | தேர்வு வாரியம்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | கல்வி பயின்ற நிறுவனத்தின் பெயர் | சராசரி மதிப்பெண்ணின் விழுக்காடு (அனைத்து செமஸ்டர்களிலும் அனைத்து பாடங்களிலும் பெற்ற மதிப்பெண்களின் ஒட்டு மொத்த சதவீதம்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| **SSLC** | | | | | |
| **Higher Secondary** | | | | | |
| **Diploma in Civil Engineering** | | | | | |

**3. இதர தொழில்நுட்ப கல்வித் தகுதி விவரங்கள்**

| தேர்வின் பெயர் | தேர்வான மாதம் மற்றும் வருடம் | தேர்வுக் குழுமம்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சராசரி மதிப்பெண்ணின் விழுக்காடு | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**4. தமிழ்நாட்டில் எங்கும் சேவை செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? : ஆம் / இல்லை**

**5. சான்றொப்பம்:**

1) நான் இந்திய குடிமகன் எனவும், கடந்த 5 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் வசித்து வருகிறேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

2) என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ற வகையில் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன். மேலும், அந்த தகவல்களில் மாற்றம் ஏதும் ஏற்பட்டால் நான் உடனடியாக உங்களுக்கு தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்கிறேன். மேலும், என்னால் அளிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என அறியப்பட்டால், என்மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் :

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

## விண்ணப்பதாரருக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பப் படிவம் தெளிவான எழுத்துகளில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

2. சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான விண்ணப்பதாரரின் புகைப்படம் விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டப்பட்டு, விண்ணப்பதாரரால் சுய கையொப்பமிடப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரரால் சுய சான்றொப்பமிடப்பட்ட பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள், பட்டயப் படிப்பில் பெறப்பட்ட தொகுப்பு மதிப்பெண் பட்டியலின் நகல் அல்லது ஒவ்வொரு பருவத்திலும் (செமஸ்டர்) வழங்கப்பட்ட மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள் மற்றும் இதர கல்வித்தகுதி சான்றிதழ்களின் நகல்கள், குடும்ப அட்டையின் நகல், ஆதார் அல்லது முகவரி மற்றும் ஆளறி சான்றாக மத்திய மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு ஆவணத்தின் நகல் ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அதன் இணைப்புகளுடன் பதிவஞ்சலில் ‘‘முதல்வர் / இணை இயக்குநர் (பயிற்சி), நிலஅளவைப் பயிற்சி நிலையம், ஒரத்தநாடு-614 625, தஞ்சாவூர் மாவட்டம்’’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

   விண்ணப்பம் அடங்கிய தபால் உறையின் மேல் ‘‘நிலஅளவை செய்வதற்கான உரிமம் பெறுவதற்குரிய பயிற்சிக்கான விண்ணப்பம்’’ என குறிப்பிடப்படவேண்டும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி:20.01.2021.